**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 1034 of 2025 |

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : மோகன்பிரபு

Father's Name : மணி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 29th **day of April** 2026.

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் கோவை மாவட்டம் சூலூர் தாலுகாவில் குடியிருந்து கொண்டு பெயிண்டிங் காண்ட்ராக்ட் எடுத்து ஆட்களை வைத்து வேலை பார்த்து வருகிறேன். ராபின் என்னிடம் பெயிண்டராக வேலை பார்த்து வந்தார். எதிரியும் என்னிடம் பெயிண்டராக வேலை பார்த்து வந்தார். கடந்த 17.08.2025 ஆம் தேதி காலை சுமார் 11.00 முதல் 11.30 மணிக்குள்ளாக சூலூர் ஐயப்பன் மெஸ் முன்பாக இருந்து கொண்டு ராபின் எனக்கு போன் செய்து, ஆனந்த் தன்னிடம் சண்டை போடுவதாகவும் என்னை உடனடியாக வருமாறும் கூறினார். நானும் உடனடியாக சென்றேன். நான் அங்கு சென்றவுடன் ஆனந்திற்கும் ராபினுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு இருவரும் சண்டை போட்டார்கள். அவ்வாறு சண்டை போட்டுக் கொண்டிருந்த பொழுது கீழே கிடந்த பியர் பாட்டிலை எடுத்து ஆனந்த் ராபின் தலை மீது அடித்துவிட்டார். பின்னர் ராபின் அவர்களை நாங்கள் சூலூர் அரசு

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றோம். பின்னர் சூலூர் காவல் நிலையத்தில் ராபின் புகார் அளித்தார். புகார் அளித்தது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்பொழுது நீதிமன்றத்தில் புகைப்படத்தில் உள்ள பாட்டிலால் எதிரி தாக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் கண்ணாடி பாட்டிலால் தாக்கினார் (பீங்கான்) போன்று இருந்தது. நான் சம்பவ இடம் செல்வதற்கு முன்பாகவே இருவரும் சந்தித்துக் கொண்டார்கள் என்றால், நான் அங்கு சென்ற பொழுது இருவரும் இருந்தார்கள். எனக்கு காலை 11.00 மணியளவில் தான் போன் செய்தார்கள் என்றால், 11.00 முதல் 11:30 மணிக்குள்ளாக போன் செய்தார்கள். நான் சுமார் 5 நிமிடத்திற்குள் அங்கு சென்று விட்டேன். எதிரியும் ராபினும் ஏற்கனவே பழக்கமானவர்கள் மற்றும் இருவரும் ஒன்றாக மது அருந்துவார்கள் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கு முன்பாகவும் இருவர்களுக்குள்ளும் பிரச்சனை ஏற்படும் என்றால் சரிதான் நான் சென்று சமாதானம் செய்து வைப்பேன். நான் போலீசார் விசாரணையில் சொன்ன விபரத்தை தான் முதல் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் முதல் விசரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. ஐயப்பா மெஸ் முன்பாக சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டு இருந்தது என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், நான் சொல்வது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**